

# நினைவுகள்

‘எத்தனை நல்லம் என் காதல் கலியாணத்தில் முடியாதது’ - இந்த நினைப்பு அடிக்கடி வருகிறது. அந்த நினைப்பைத் தொடர்ந்து புன்சிரிப்பு வருகிற அளவிற்கு வாழ்க்கையில் நிறைய பார்த்தாயிற்று. ஆனாலும் உன்மீது நான் கொண்டிருந்த காதலை, குழந்தைப் பிள்ளைத்தனம் என ஏனோ இன்னும் நினைக்கத் தோன்றவில்லை.

உன்னை ‘நீ’ என்பது தான் இயற்கையாக உள்ளது. நீ இப்போது என்னை விட வயதானவன் ஆனாலும், உன்னை இன்னும் அந்த அரைக் காலச்சட்டை போடும் பையனாக மட்டும் தான் நினைவில் வைத்திருக்க முடிகிறது. உனது இடம் எனது வாழ்வில் நான் உன்னைக் காதலித்த நேரம் மட்டும்தானோ!

திரும்பத் திரும்ப ‘நான் உன்னை காதலித்தேன்’ என்றும், ‘என் காதல்’ என்றும், நான் ஒரு தலைப்பட்சமாக கதைப்பதை நீ எப்போதுமே எதிர்த்திருக்கிறாய்.

அன்று பலாலி விமான நிலையத்தில் வைத்து இரண்டு சத்தியங்கள் கேட்டாய். ‘நான் கடவுளை நம்புவேன்’ என்றும், ‘நீ என்னை கலியாணம் செய்து கொள்வாய் என நம்புவேன்’ என்றும் சத்தியம் பண்ணச் சொன்னாய்.

‘நம்புவேன் என்று சத்தியம் பண்ணலாம். சத்தியம் பண்ணினால் மட்டும் நம்பாததை நம்ப முடியுமா’ என்று நான் கேட்டதற்கு தெளிவாகச் சிரித்தாய்.

உன்னில் எனக்குப் பிடித்தது உனது அந்த முரண்பாடுகள் தான். ‘பொட்டு அணிந்து கொள்’ என்று உனது நண்பர்கள் சமுதாயத்தால் ஏற்றுக் கொள்ளப்படத் துடிக்கும் அதே நேரத்தில், ‘இந்த ஊரிலே இனியில்லை என்ற கெட்டிக்காரன் யார்’ எனக் கேட்ட உனது யாழ்ப்பாண நண்பனை என் வீட்டிற்கு அழைத்து வந்தாயே - அந்த உனது மனம். I just loved it.

சுதாரணதரப் பரீட்சையில் four ‘D’ எனக்கு. யாருக்குமே அந்த ஊரிலே அது வரை கிடைக்காதது, போயும் போயும் ஒரு பெண்ணிற்கு கிடைத்தது பொறுக்காமல், முற்றவெளியில் நின்று, நான் அதைக் கடந்து வாசிகசாலை போகும் பொழுதெல்லாம், ‘போ....டி....’ எனக் கத்தி என் திறமையைப் பாராட்டிய ஆண்பிள்ளைகள் மத்தியிலே நீ ஒரு வித்தியாசமான ஆண்.

எனது திறமை, எனது மூளை, இதற்கெல்லாம் சொந்தக்காரனாகி விடுவது குறித்து உனக்கொரு பெருமை. எவனுக்கு மூளையுள்ள பெண் தேவைப்படுகிறது. மூளை இருப்பது மட்டுமல்ல, அதைப் பாவித்து, நான் விவாதச் சுற்றுப் போட்டிகளில் விவாதித்து வெற்றி பெற்ற போதெல்லாம், எனது வெற்றிகளில் பெருமை கொள்ள நீ அங்கே நின்றிருந்தாய்.

எனக்கு என்ஜினியர் பீடம் கிடைத்து நான் கொழும்பிற்கும், உனக்கு விஞ்ஞான பீடம் கிடைத்து நீ யாழ்ப்பாணத்திற்குமாக பிரிந்து, எழுபத்தேழின் இனக்கலவரம் என்னை கப்பலில் யாழ்ப்பாணம் கொண்டு வந்த போது, ‘இவள்தான் என் என்ஜினியர் காதலி’ எனக் காட்டி பெருமை கொண்டாய்.

எனது தகப்பனாருக்கு உன்னில் பிடித்தது உனது அந்த ஒரு குணம் மட்டும் தான். ஆண்களைப் பற்றி அவரை விட வேறு யாருக்கு அவ்வளவு நன்றாகத் தெரிந்து இருந்திருக்கும். என் வருங்காலக்

கணவன், எனது முன்னேற்றத்திற்கு முட்டுக்கட்டை போட்டுவிடுவானோ எனக் கண்களில் விளக்கெண்ணெய் பூசிக் கொண்டு உன்னை பரீட்சித்தார். எனது திறமைகளை எனது அணிகலன்களாக நீ நினைத்த ஒரே காரணத்திற்காக, உன்னை ஏற்றுக் கொண்டார்.

உனக்கும், எனது தந்தைக்குமிடையே நிறைய ஒற்றுமைகள். அவரும் சரி, நீயும் சரி நிறைய முரண்பாடுகள் மிக்க ஆண்கள்.

எனது தகப்பனார் என்னை வித்தியாசமான, தனித்தன்மை வாய்ந்த, ஆணடக்கத்திற்கு அடிபணியாத ஒரு பெண்ணாக வளர்த்ததும், எனது அந்தக்குணங்களை அடுத்தவர்கள் குறையாகச் சொன்னபோது சிரித்து பெருமையுடன் அதை ஏற்றுக்கொண்டதும் ஒருபுறமிருக்க - மறுபுறம் எனது தாயார், எப்போதும் தனது தனித்தன்மையை எக்காரணம் கொண்டும் விட்டுக் கொடுக்காதது, அவருக்கு ஒரு பெரும் வாழ்க்கைப் பிரச்சனையாகவே போயிற்று.

நீ கூட அவர் போலவே தான். ‘எதை வேண்டுமானாலும் அணிந்து கொள்’ என்றாய். ‘ஆனால் பொட்டு - அதுவும் சிவப்புப் பொட்டு - முக்கியம்’ என்று என் கைகளைப் பிடித்துக் கொண்டு கெஞ்சினாய்.

நீ கெஞ்சினாலும் சரி, மிஞ்சினாலும் சரி, எனக்கு எது செய்ய வேண்டும் போலிருந்ததோ, அதையே நான் செய்தேன் - எனது வாழ்க்கையைப் பொறுத்தவரை. உனது வாழ்க்கையில் தலையிட எனக்குத் தோன்றவேயில்லை.

உன் மீது நான் அத்தனை அன்பு வைக்கக் கூடியளவு நீ இருந்தாயே, அதுவே போதும் எனப்பட்டது. எங்களை மட்டுமே நாங்கள் உண்மையாகக் காதலிக்க முடியும் என்ற இந்த உலகத்திலே, நான் என்னை மட்டுமல்லாது உன்னையும் காதலிக்க, முழுமனதாக நேசிக்க, முடியுமாக இருந்ததே - அதுவே பெரிய விஷயம் போல தோன்றிற்று.

உன்னை நேசிப்பது நானா அல்லது எனக்குள்ளிருந்தும் எனக்குக் கட்டுப்படாத எனது மனமா என்று எனக்கு எப்பவுமே விளங்கிக் கொள்ள முடிந்ததில்லை.

உனது நினைப்பே எனக்கு அத்தனை சந்தோஷம் தந்து உலகின் உச்சிக்கே என்னை அழைத்துச் சென்றபோது, உனக்கு அப்பால் சென்று உன் வாழ்க்கையை எனதாக்கிக் கொள்ள வேண்டுமென்று எனக்குத் தோன்றவேயில்லை.

சொல்லப்போனால் நீயும் நானும் ஒரு நாள் கல்யாணம் செய்து கொள்வோம் என்று நான் நினைத்ததேயில்லை.

இதை நான் உனக்குச் சொன்னபோது, பக்கத்தில் அமர்ந்திருந்த நீ படக்கென்று எழுந்தாய், சுழன்றாய், திரும்பவும் அருகே அமர்ந்தாய். ‘சத்தியம் செய்’ என்றாய். நீ எனது கழுத்தில் தாலி கட்டுவாய் என நான் நம்புவதாக உன் கையிலடித்து சத்தியம் செய்யச் சொன்னாய். நான் அதைக் கேட்டுச் சிரித்த போது, நீயும் என்கூட புன்னகைத்தாய்.

எனது நினைப்புகள் எல்லாம் உனக்கு எப்போதுமே விளங்கிவிடும், நன்றாகவோ விளங்கிவிடும். உன்னருகே உள்ளபோது உனக்குச் சொல்ல எனக்கு ஒன்றுமேயில்லாமல் போகிற அளவிற்கு என்னைத் உனக்கு தெரிந்திருந்ததுதான் உனது சொத்து.

வசனங்கள் எங்களுக்கிடையே விளக்கம் தேவையற்று வந்ததால், எனக்கும் உனக்குமிடையே கதைக்க பெரிதாக ஒன்றுமே இருந்ததில்லை. சேர்ந்திருந்த நேரங்களை, நீ உன் காதலிகளின் கதை சொல்லி நிரப்புவாய். அது கதையென்று நீ நடிப்பாய். நம்புவதாக நான் நடிப்பேன். உனது கண்கள் அந்தக் கதையில் எது உண்மை, எது பொய் என்று எனக்குக் காட்டிக் கொடுத்ததை நீ அறியவில்லை. நானும் உனக்கு சொன்னதில்லை. சொல்ல வேண்டிய தேவை இருக்கவில்லை.

‘உனக்கு ஆயிரம் காதலிகள் இருந்தால் எனக்கென்ன. எனது ஒரே காதலன் நீ’ - அது மட்டும் போதாதா எனக்கு.

எனது மதிப்புக்கரிய முன்னாள் ஆசிரியர், எனது திறமைகளைப் பார்த்து எனது வருங்காலத்தை தனது வருங்காலமாகக் கருதி நிறையவே அலட்டிக்கொள்பவர், கேட்டார் என்னிடம் “என்ன இந்தப் பையன்? அவனைப்பற்றி முழுதும் உனக்குத் தெரியுமா? தெரிந்தும்தான் காதலிக்கிறாயா?”

“தெரியும். I don’t like what he does, but I don’t mind it” என்றேன். “பிடிக்கவில்லை என்கிறாய். பரவாயில்லை என்கிறாய். என்ன அர்த்தம்” என்றார்.

அதே கேள்வியை நீயும் கேட்டாய், நாங்கள் பலவருடங்கள் கழித்து சந்தித்தபோது. ‘என்ன அர்த்தம், நான் உன்னை காதலித்ததாக அர்த்தம்’ என்று நான் சொன்னதைக்கேட்டு, மற்றும் ஒருமுறை எழுந்தாய், சுழன்றாய், அமர்ந்தாய். ‘அத்தனை ஆழமானதாய் இருந்ததா உன் காதல்’ என வியந்தாய். சோகமானாய். மலையாக உன்னருகே அமர்ந்திருந்த என்னை உன் சோகம் தொடவில்லை.

உனது ஆழமற்ற உணர்ச்சிகள் என்னை எப்போதுமே தொட்டதில்லை. அது பற்றியும், உன் வாழ்க்கையில் நான் தலையிடாதது பற்றியும் அடிக்கடி நீ நொந்து கொள்வாய். உனது படத்தைத் தந்து ‘வைத்துக்கொள்’ என்றாய். ‘வேண்டாம் உனது படம்’ என்று நான் சொன்னதைக் கேட்டு, நீயே நானாகிப் போனது தெரியாமல், அலட்டிக்கொண்டாய்.

தரையிலே நின்று கொண்டு, குழி பறித்து அதனுள்ளே தன் காதலியை நிற்கச் சொல்லும் இந்த சமுதாயத்தில் நீ நிறையவே வேறுபட்டவன். ஆனாலும் இருவரும் நிற்க தரையில் இடம் போதுமா என அடிக்கடி உனக்கு ஒரு சந்தேகம். என்னைத் தரையில் விட்டு விட்டு, நீயாகவே குழி பறித்து அதனுள் நிற்கத் தொடங்கினாய். அப்படியாவது நான் உன்னையும், உனது ஆழமற்ற உணர்ச்சிகளையும் பொருட்படுத்துவேன் என நினைத்தாய்.

எனக்குச் சொந்தம் நீயா அல்லது உன் காதலா என போட்டி போட ஆரம்பித்தாய். நான் எவ்வளவு அமைதியாக இருந்தேனோ, நீ அவ்வளவிற்கு ஆட்டங்காணத் தொடங்கினாய். குழிக்குள் இறங்கியது மட்டுமின்றி, அதை வெகு ஆழமாகவும் தோண்டத் தொடங்கினாய். அதற்குள் என்னையும் இறங்கச் சொன்னாய், உன் மீது நான் கொண்ட காதலை நிரூபிக்க.

இதயமெல்லாம் நிரம்ப நிரம்ப உன்னைக் காதலித்தது என்னவோ உண்மைதான். ஆனால் காதலை எப்படி நிரூபிப்பது? - அன்றும் எனக்கு அது தெரியவில்லை. இன்றும் எனக்கு அது புரியவில்லை.

எனக்குத் தெரிந்ததும் புரிந்ததும் ஒன்றுதான், அது உன் மீது நான் கொண்ட காதல். அது மட்டும் இன்னும் வாழ்கிறது - எனது இதயத்தினுள் நீ முற்று முழுதாகச் செத்துப்போன பிறகும்.

- Jan 1998